**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**KILVELUR**
**CC 558/2023**
LW 5 PW 2

| | | | |
|---|---|---|---|
| Name | தமிழரசன் | Caste | |
| Father's/ Name | பக்கிரிசாமி | Calling | |
| Village | புலியூர் | Religion | |
| Taluk | | Age | 34/2026 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **30th day of July 2026**

Signature of witness.

**எதிரிகள் ஆஜர்**
**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். மேற்படி கையொப்பத்தினை எங்கு எப்பொழுது செய்து கொடுத்தேன் என்று நினைவில் இல்லை. **பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா. ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது.

**(அரசு தரப்பு சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்ததால் நீதிமன்றத்தில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 12.05.2023 அன்று மதியம் 01.00 மணியளவில் போலீசார் சம்பவ இடம் வந்து பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார்

செய்தார்கள் என்றும் அதில் சாட்சியாக நான் கையொப்பம் செய்து கொடுத்து விட்டு தற்போது ஆஜர் எதிரியும் அ.சா. 1 ம் சமாதானம் ஆகி விட்டபடியால் தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு வழக்கறிர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/– ர.மீனாட்சி எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கீழ்வேளூர்.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**KILVELUR**
**CC 558/2023**
LW 1 PW 1

| | | | |
|---|---|---|---|
| Name | சிவரஞ்சனி | Caste | |
| Father's/ Name | திருநாவுக்கரசு | Calling | |
| Village | புலியூர் | Religion | |
| Taluk | | Age | 31/2026 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **30th day of July 2026**

Signature of witness.

**எதிரிகள் ஆஜர்**
**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது கணவரின் தம்பி ஆவார். சில வருடங்களுக்கு முன்பு எங்கள் குடும்பத்திற்கும் ஆஜர் எதிரி குடும்பத்திற்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது. அது தொடர்பாக போலீசில் புகார் அளித்திருந்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா. ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்ததால் நீதிமன்றத்தில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 10.05.2023 அன்று இரவு 8.30 மணியளவில் எனது கணவர் வீட்டில் இல்லாதபோது ஆஜர் எதிரி அத்துமீறி வீட்டிற்குள் நுழைந்து என்னை ஆபாசமான வார்த்தைகளால் பேசி கையை பிடித்து இழுத்து சத்தம் போட்டால் உன்னை கொன்று விடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார் என்றும் அது தொடர்பாக எதிரி மீது நடவடிக்கை எடுக்கும்படி போலீசாரிடம் புகார் அளித்து விட்டு, தற்போது எதிரியிடம் சமாதானம் ஆகி நீதிமன்றத்தில் சமாதான மனு தாக்கல் செய்துள்ளதால் எதிரியை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு வழக்கறிர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/- ர.மீனாட்சி எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கீழ்வேளூர்.